# முதல் இடைப்பருவத் தேர்வு - 22
## விடைகுறிப்பு
10 தமிழ்

1.இளங்குமரனார்
2.மலேசியா
3.பாரதியார்
4.வினைத்தொகை
5.மலைபடுகடாம்
6. சொல்லினை அளபெடை
7.சோறு
8.பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
அரும்பு, போது, மலர், வீ, செம்மல்.
9.விடைக்கு ஏற்ற வினா.
அ) பாட்டுக்கு ஒரு புலவன் என்று பாரதியாரை பாராட்டியவர் யார்?
ஆ) இருத்தலும் இருத்தல் நிமித்தமும் எந்த திணையின் உரிப்பொருள்?
10.வசன கவிதை – குறிப்பு வரைக.
உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும்.
கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும்.ஆங்கிலத்தில் Prose Poetry என்பர்.
11. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

12.இரு சொல்லையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
மலை - மாலை
மலையேறும் போது மாலை நேரமாகிவிட்டது .
வளி - வாளி
வளிமண்டல காற்று பெற மரம் நட்டு வாளி நிறைய தண்ணீர் ஊற்றுவோம் .
13.சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.
அ) கீரிபாம்பு - உம்மை தொகை
அண்ணனும் தம்பியும் சொத்துக்காக கீரியும் பாம்பையும் போல் சண்டை போட்டனர்.
ஆ) முத்துப்பல் – உவமைத்தொகை. மாலாவின் முத்துப்பல் மேலும் அவளுக்கு அழகு சேர்க்கிறது.
14.கலைச் சொற்கள் தருக.
அ) நாட்டுப்புற இலக்கியம் ஆ) புயல்
15.பகுபத உறுப்பிலக்கணம் தருக.
மலைந்து = மலை + த்(ந்) + த் + உ
மலை - பகுதி, த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

16.உரைப்பகுதிக்கு விடை தருக.
அ) அமெரிக்கா
ஆ) மினசோட்டா தமிழ்ச்சங்கம் வாழை இலை விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது.
இ) முருங்கைக்காய் சாம்பார், வேப்பம்பூ ரசம், மோர் குழம்பு, திணை பாயாசம், அப்பளம்.

அல்லது

சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

மின் விசிறிக் காற்று : நண்பா! வா எங்கெல்லாம் சுற்றித் திரிந்து வருகிறாய்? என்னைப் போல் நிலையாக ஓரிடத்திலிருந்து வீசக் கூடாதா.
சோலைக்காற்று : நீ ஓரிடத்தில் இருந்து நிலையாக வீசினாலும் உன்னை இயக்க ஒருவர் தேவை. அது மட்டுமல்லாமல் நீ கொடுக்கும் வெப்பக்காற்றை மனிதர்கள் வேறு வழியின்றி பயன்படுத்துகின்றனர். மின்சாரம் தடைப் பட்டாலும் மனிதர்கள் உன்னை இயக்க முடியாது.
மின் விசிறிக் காற்று : மனிதர்கள் உன்னை விரும்புகிறார்களா?
சோலைக்காற்று : ஆம், நான் மக்களுக்குக் குளிர்ந்த காற்றைக் கொடுக்கிறேன். என்னிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்றனர். காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடத்திலும் தமிழகம் முதல் இடத்திலும் உள்ளது. புதுப்பிக்கக் கூடிய வளமான என்னைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படுகிறது.
மின் விசிறிக் காற்று : இத்தனை சிறப்புகள் கொண்ட உன்னை வைத்து ஒரு புது மொழியை உலகிற்குக் கூறப்போகிறேன்.
சோலைக்காற்று : அப்படியா! அப்புது மொழி யாது?
மின் விசிறிக் காற்று : “காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக் கொள்”.

17.அடிபிறழாமல் எழுதுக.

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

அல்லது

விருந்தினராக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன் அழுகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதால்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்

ஒழுக்கம் வழிபடும் பண்பே

18. ‘கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!
இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.
Answer:
‘கண்ணே கண்ணுறங்கு – விளித்தொடர்
காலையில் நீயெழும்பு – ஐந்தாம் வேற்றுமை தொகாநிலைத் தொடர்
மாமழை பெய்கையிலே – உரிச்சொல் தொடர்
மாம்பூவே கண்ணுறங்கு – விளித்தொடர்
பாடினேன் தாலாட்டு – வினைமுற்றுத் தொடர்
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு – அடுக்குத்தொடர்

19.

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் துய்ப்பதால் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழாய் வளர்ந்தது. | முத்தினை அமிழ்ந்து தருகிறது. |
| முச்சங்கம் கண்டதால் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| மெத்த வணிகலமும் மேவதால் (மெத்த அணிகலன்) | ஐம்பெருங்காப்பியங்கள் அணிகலனாய்ப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் வந்து சென்றது. |
| நித்தம் அணை கிடந்தே சங்கத்தவர் காக்க | சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தனர். | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காத்தது. |

20.உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்

அனுப்புநர்:
கண்ணன்,
25, வள்ளல் தெரு,
அண்ணாநகர்,
அஅஅ – 11.

பெறுநர்:
உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம்,
அஅஅ.

மதிப்பிற்குரிய ஐயா,
பொருள் : தரமற்ற உணவு வழங்கிய உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுதல் – தொடர்பாக.

Padasalai.Net

வணக்கம். இன்று காலை பேருந்துநிலையத்திற்கு வெளியில் உள்ள "சுவையகம்" என்ற உணவகத்திற்குச் சென்றோம். நானும் என் நண்பனும் உணவு உண்டோம். உணவில் கல்லும், குழம்பில் பூச்சியும் கிடந்தது. உணவக மேலாளரிடம் முறையிட்டோம். அதற்குச் சரியான காரணத்தை அவர் அளிக்கவில்லை. மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த உணவு விலைப்பட்டியல் பலகையில் எழுதி வைக்கப்பட்டிருந்த தொகையை வாங்காமல் கூடுதலாக இருபது ரூபாயைக் காசாளர் வாங்கினார்.
எனவே, தரமற்ற உணவையும், விலை கூடுதலாகவும் விற்பனை செய்த, அந்த உணவகத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதற்கான தக்க சான்றுகள் (புகைப்படம்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

நன்றி!

அஅஅ. இப்படிக்கு,
25.05.2022 தங்கள்
உண்மையுள்ள,
கண்ணன்

.

உறைமேல் முகவரி:
பெறுநர்
உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம், அஅஅ..

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com